TAMIL NADU LEGISLATURE
31 சன 1979
MADRAS

தமிழ்நாடு சட்டமன்ற மேலவை.

வெள்ளிக்கிழமை, 1978 செப்டம்பர் 15.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில் முற்பகல் 10-00 மணி அளவில் மேலவை மாற்றுத் தலைவர் (திரு. க. இராமமூர்த்தி) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

1. அறிவிப்பு

மாற்றுத் தலைவர் (திரு. க. இராமமூர்த்தி): மேலவை நிகழ்ச்சி இன்று துவங்குவதற்கு முன்னதாக பேரறிஞர் அண்ணாவின் 70வது பிறந்த நாளில் தமிழ் இனத்தின் தானைத் தலைவனாக இருந்தவர் என்கின்ற பெருமையோடு இந்த அவையின் உறுப்பினர்களோடு என்னுடைய மகிழ்ச்சியைப் பகிர்ந்துகொள்கின்றேன்.

2. அலுவல் வரிசையில் மாறுதல்

மாண்புமிகு திரு. க. இராசா முகமது: மாற்றுத் தலைவரவர்களே,

''மேலவை விதி 21 (3)ன் கீழ் இனம் 1ஐ இனம் 4க்குப் பிறகு எடுத்துக்கொள்ளலாம்''

என்று முன்மொழிகின்றேன்.

மாற்றுத் தலைவர்: அவை முன் உள்ள பிரச்சினை:

''மேலவை விதி 21(3)ன் கீழ், இனம் 1ஐ இனம் 4 க்குப் பிறகு எடுத்துக்கொள்ளலாம்''.

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

3. அரசின் சட்ட முன்வடிவுகள்.

(1) தமிழ்நாடு 1978 ஆம் ஆண்டு, மின்சக்தி வழங்கல் குறித்த கட்டண வீதங்களைத் திருத்தியமைத்தல் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 39/1978)

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மேலவைத் தலைவரவர்களே,

''சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு, 1978 ஆம் ஆண்டு, மின்சத்தி வழங்கல் குறித்த கட்டண வீதங்களைத் திருத்தியமைத்தல் சட்ட முன்வடிவு *(சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 39/1978) ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்''

என்று முன்மொழிகிறேன்.

---

* 598-612 ஆம் பக்கங்களில் இணைப்பு 1 ஆக அச்சிடப்பட்டுள்ளது.